**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029176

1. District : மாவட்டம் தூத்துக்குடி | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு(ம்) கண்காணிப்புப் பிரிவு | Year: ஆண்டு | FIR No. மு.த.அ. எண் 02/2019 | Date: நாள் 14.02.2019

2. (i) Act சட்டம்: 7(a) of the Prevention of Corruption Act. 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act - 2018. Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 12.02.2019 | Date from நாள் முதல் 12-02-2019 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு மதியம் 12.00 மணி | Time from : நேரம் முதல் மதியம் 12.00 | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14-02-2019 | Time : நேரம் 07.45 a.m (காலை)
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D VOL - I | Time : நேரம் 14.02.2019 07.45 a.m.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக - புகார் வாக்குமூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் திருப்பந்தனேரி கிராம நிர்வாக அலுவலகம், சுமார் 30 கி.மீ. தெற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி திருப்பந்தனேரி கிராம நிர்வாக அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. நயினார் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.செல்லத்தேவன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 43. | (d) Nationality : நாட்டினம் இந்தியன். | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாய வேலை. | (g) Address : முகவரி கதவு எண் - 2/70, நடுத்தெரு, சிவத்தகாரர் குறிச்சி, ஸ்ரீவைகுண்டம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   சாந்தி, கிராம நிர்வாக அலுவலர் (VAO),
   திருப்பந்தனேரி கிராமம்,
   ஸ்ரீவைகுண்டம் தாலுகா.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - இல்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V.B. [signature] 14.2.19 | [signature] 14/02/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14.02.2019
04.20 a.m.

Name: பெயர் ..................
Rank: நிலை .................. No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

**Continuation of Thoothukudi Vigilance and Anti-Corruption FIR in Cr.No.02/2019, 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018.**

**FIR Contents:**

இன்று 14.02.2019 –ஆம் தேதி காலை 08.45 மணிக்கு திரு.வே.நயினார், என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பற்றி இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட விஏஓ சாந்தி என்பவர் பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் வாக்குமூலத்தில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் தென்சரக காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம் சென்னைக்கு தொலைபேசியில் தெரிவித்தும் புகார் வாக்குமூலம் தன்மைப்படி தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் நிலைய குற்ற எண் 02/2019 பிரிவு 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 –ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் வாக்கு மூலம் பின்வருமாறு : வாக்குமூலம், திரு.நயினார், வயது 43, த/பெ வேல் தேவர், கதவு எண். 2/70, நடுத்தெரு, சிங்கத்தாகுறிச்சி, ஸ்ரீவைகுண்டம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். நான் மேலே கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பிளம்பர் வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 2000 ஆம் ஆண்டு வாக்கில் வசவப்பபுரம், கீழ புத்தனேரி, கந்தசாமிபுரத்தில் 3 செண்ட் இடத்தை ரூ.10,000 க்கு வாங்கி அதில் அந்த வருடமே ஒரு ஓடு மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் வீடு கட்டி அதில் குடியிருந்து வந்தேன். அதற்கு கதவு எண் 2/297 என கீழ புத்தனேரி பஞ்சாயத்தில் கொடுக்கப்பட்டது. என் பெயரில் தீர்வையும் ஒவ்வொரு வருடமும் செலுத்தி வருகிறேன். நான் கடந்த ஒரு வருடமாக என்னுடைய சொந்த ஊரான சிங்கத்தாகுறிச்சியில் குடியிருக்கிறேன். நான் கீழ புத்தனேரியில் உள்ள என்னுடைய வீடு உள்ள இடத்திற்கு பட்டா கேட்டு

பலதடவை மனு செய்திருந்தேன். ஆனால் அந்த இடம் நத்தம் புறம்போக்கு என்பதால் எனக்கும், என்னை போன்றோருக்கும் பட்டா கிடைக்காமல் இருந்தது. இந்த நிலையில் போன மாதத்தில் ஒரு நாள் கீழ புத்தனேரி விஏஓ ஆபீஸில் இருந்து வந்து என்னை போல புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி குடியிருப்பவர்களிடம் தமிழக அரசு இலவச பட்டா/சிட்டா கொடுக்க போகிறது. அதனால் விஏஓ ஆபீஸ் வந்து விண்ணப்பம் கொடுக்க சொன்னார். அதன்படி நானும் பக்கத்தில் உள்ளவர்களும் கீழ புத்தனேரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு போய் விஏஓ வை பார்த்தோம். விஏஓ அவர்கள் கேட்ட ஆதார் அட்டை, வீடு தீர்வை, ரேஷன் கார்டு, கரண்ட் பில் அட்டை ஆகியவைகளை இணைத்து விண்ணப்பம் கொடுக்க சொன்னார்கள். அது போல நானும் அவர்கள் கேட்ட ஆவண நகல்களை இணைத்து விண்ணப்பத்தில் கையெழுத்து இட்டு கொடுத்தேன். அந்த விண்ணப்பத்திற்கு நகல் எடுக்கவில்லை. இந்த நிலையில் இந்த திங்கட்கிழமை 11.02.2019 ஆம் தேதி காலையில் என்னைப் போல விண்ணப்பம் செய்தவர்கள் மூலம் கீழ புத்தனேரியில் உள்ள இடத்திற்கு பட்டா விஏஓ ஆபீஸிற்கு வந்துள்ளதாக கேள்விப்பட்டு காலையில் சுமார் 10.30 மணிக்கு கீழ புத்தனேரி விஏஓ ஆபீஸ் போனேன். அங்கு இருந்த விஏஓ சாந்தி என்பவரை பார்த்து அம்மா என்னுடைய இடத்திற்கு பட்டா/சிட்டா வந்துள்ளதா? வந்திருந்தால் பட்டா/சிட்டா தாருங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் எனது முழுப்பெயர் விபரத்தை கேட்டுக் கொண்டு, அங்கிருந்த பேப்பர்களை பார்த்து விட்டு உங்களுக்க நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா வந்துள்ளது. எனக்கு ரூ.2000 த்தை கொடுத்து விட்டு அதனை வாங்கி செல்லுங்கள் என்று சொன்னார். நான் விஏஓ விடம் அம்மா நான் கஷ்டப்படுகிறவன். கூலி வேலைக்கு போகிறவன். பணம் இல்லாமல் அந்த பட்டா நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா தாருங்கள் என்று சொன்னேன். அதற்கு விஏஓ, பணம் எல்லாம் இல்லாமல் ஒன்றும் நடக்காது. பணம் ரூ.2000 த்தை தந்து விட்டு நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டாவை வாங்கிவிட்டு போங்கள் என்று கண்டிப்பாக சொன்னார். நான் வீட்டுக்கு வந்து விட்டேன். எனக்கு விஏஓ சாந்தி அவர்கள் கேட்ட பணம் ரூ.2000 த்தை

கொடுக்க மனசில்லை. இதனால், நேத்தைக்கு முந்தாநாள் 12.02.2019 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு நான் மீண்டும் கீழ புத்தனேரி கிராம அலுவலகம் சென்று விஏஓ சாந்தியை பார்த்து எனது நத்தம் நிலவரி சிட்டா (பட்டா) கேட்டேன். அதற்கு அவர் நான் தான் நேற்றே சொல்லிவிட்டேனே ரூ.2000 பணம் கொண்டு வரலையா என கேட்டார். நான் என்னிடம் பணம் இல்லையம்மா என்று சொன்னேன். அதெல்லாம் எனக்கு தெரியாது. உனக்காக ரூ.1000 த்தை குறைச்சுக்கிறேன். உனக்கு 2, 3 நாள் டைம் தர்றேன், ரூ.1000 த்தை தந்து விட்டு நத்தம் நிலவரி திட்டா சிட்டாவை வாங்கிட்டு போங்கள் என்று சொன்னார். நானும் வேறு வழியல்லாமல் சரி என சொல்லிவிட்டு வந்து விட்டேன். நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தேன். எனக்கு விஏஓ விற்கு லஞ்சமாக ரூ.1000 கொடுக்க விருப்பமில்லை. நேற்று 13.02.2019 ஆம் தேதி என் மாமா இறந்துவிட்டதால் அங்கு சென்று அடக்கம் முடித்து இரவுதான் வீட்டிற்கு வந்தேன். அதன்பின் யோசித்து பார்த்து லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுத்திடுவோம் என முடிவு செய்து வீட்டில் நான் சேர்த்து வைத்திருந்த ரூ.1000 த்தையும் எடுத்திட்டு வந்து உங்களிடம் இந்த விபரத்தை புகாராக தெரிவித்துக் கொள்கிறேன். முறைப்படி எனக்கு வந்து சேர கூடிய நத்தம் நிலவரி சிட்டா (பட்டா) வழங்க லஞ்சம் கேட்கும் கீழ புத்தனேரி விஏஓ சாந்தி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். விஏஓ சாந்தி என்னிடம் கேட்ட ரூ.1000 பணம் கொண்டு வந்து உள்ளேன். அவர் மீது எடுக்கப்படும் நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு அளிக்கிறேன். நான் சொல்ல சொல்ல இந்த வாக்குமூலத்தை தாங்கள் எழுதினீர்கள். படிக்கக் கேட்டேன். சரியாக இருந்தது. Sd/-xxxxx, V.நயினார், 14.2.19. (LTI of Tr.நயினார்) இன்று 14.02.2019 ஆம் தேதி காலை 07.45 மணியளவில் நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலையம் ஆஜராகி திரு.நயினார் என்பவர் ஓர் புகார் வாக்குமூலம் அளித்தார். அதனை நான் பதிவு செய்து திரு.நயினாருக்கு வாசித்து காண்பித்து அவரின் கையொப்பம் பெற்றேன். மேலும், அவரின் இடது

பெருவிரல் ரேகை அதில் பெற்றுக் கொண்டேன். Sd/xxxxx, (Tr.R.Authees), 14/02/2019, Inspr. V&AC, Tuticorin.

இன்று 14.02.2019 –ஆம் தேதி காலை 08.45 மணிக்கு மேற்கண்ட புகார் வாக்குமூலத்தை பற்றி இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட விஜி சாந்தி என்பவர்களை பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் இந்த புகார் வாக்குமூலத்தில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் தென்சரக காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம் சென்னைக்கு தொலைபேசியில் தெரிவித்தும் புகார் வாக்குமூலம் தன்மைப்படி தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் நிலைய குற்ற எண் 02/2019 பிரிவு 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 –ன்படி வழக்கு பதிவு செய்தேன். Sd/xxxxx, (Tr.R.Authees), 14/02/2019, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு (ம) க.பிரிவு, தூத்துக்குடி. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் அசல் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை மேன்மைமிகு தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை என்னுடைய விசாரணைக்காக எடுத்துக் கொண்டேன்.

14/02/2019
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு பிரிவு,
தூத்துக்குடி.